ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2052/7 - 2018 ජනවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2018.01.02
*2052/7 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/6/2016/5.
காணி அமைச்சின் இல.: 4-3/7/2016/HW/82.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

வடமேல் மாகாணத்தில், குருநாகலை மாவட்டத்தில், பொல்கஹவலை பிரதேச செயலாளர் பிரிவின், உடபொல ஓதொட்ட கோரலை மேற்கு சிறு பிரிவில், இல. 912, கொரதொலுவ கிராம அலுவலர் பிரிவில் வேவல மற்றும் கொரதொலுவ கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட மு. கி. வ. இல. கு 2357 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்படும் விபரங்களையுடைய காணித் துண்டு:

1. **துண்டுஇல. 40**

காணியின் பெயர்: - ; விபரம்: பாதை; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: உரிமை கோருவோரை தேடிக்கொள்ள முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0163 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு பொல்கஹவலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவலை,
2017, திசெம்பர் 29.

*01 - 443*